4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 569/2019 நாள்: 19.11.2025 வா.சா.1 – அருணகிரி**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

எனது தாயாருக்கு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எவ்வித உரிமையும் பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதியை ராமலிங்க கவுண்டர் தத்தெடுப்பதற்கு முன்பாகவும், பின்பாகவும் மகனாக தான் பாவித்து வந்தார் என்றால் சரியல்ல. ராமலிங்க கவுண்டருக்கு அவருடைய 1வது பிரதிவாதிக்கு அவருடைய விருப்பம் போல் தாவா சொத்தை எழுதி கொடுப்பதற்கு உரிமையுண்டு என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதிக்கு ராமலிங்க கவுண்டர் எழுதி கொடுத்த இரண்டு செட்டில்மெண்ட் ஆவணமும் மற்றும் ஒரு பிழை திருத்தல் ஆவணமும் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதியை 2 பிரதிவாதி ராமலிங்க கவுண்டருக்கு சுவீகாரம் கொடுத்த பிறகு 1வது பிரதிவாதிக்கும், 2வது பிரதிவாதிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**2வது பிரதிவாதி தரப்பில் மேற்படி 1வது பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை தழுவுகிறார்கள்.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.11.19 16:17:44 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.